Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12





துதிப்பது என்பது
நமது சுவாசம்போல்
இயற்கையாக
இருக்கவேண்டும்..




துதிப்பதே
தேவனுடைய
பிரசன்னத்திற்கு
செல்லும் வழி..

தாகத்தோடும்,
வாஞ்சையோடும்
தம்மை
ஆராதிப்பவர்களோடு
இருக்கக்
கர்த்தர்
வாஞ்சிக்கிறார்

Owned and Published by : S.Paulraj Kennedy from A-1,Deju Plaza,No.2,South Avenue,Srinagar Colony, Saidapet,Chennai-600 015.Ph:+91- 44 - 22353500
Printed by : Jolly Peter at Sharp Offset Printers,New No.96,Old No.223,Peters Road,Royapettah, Chennai-600 014.Ph:+91- 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒளி எக்காளம்

VOL . 3 ISSUE . 10 தனிப்பிரதி ரூ 20/= மே 2010





# காத்திருத்தல்

– நிஜா கென்னடி

கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

- ஏசாயா 40:31

நாம் எப்படி தேவனுக்குள் வாழ்வது என்பதை சரியாக அறிந்து கொள்ள வேண்டுமானால், வேதத்தை தினமும் படிக்க வேண்டும். அதன் மூலமாக தேவனது வழிமுறைகளையும், அவரது மனப்பான்மையையும், அவரது கருத்துக்களையும், ஒவ்வொரு காரியத்தை தேவன் எப்படியாகப் பார்க்கிறார் என்பதையும், அவர் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம். வேதத்தை படிப்பதன் மூலம், தேவனைப் பற்றி அறிகிற அறிவில் வளரலாம். தேவனுக்கு எது பிரியமானது, எது பிரியமில்லாதது, எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதை அறிந்து, நம்முடைய வாழ்க்கையில் அதை பின்பற்றி,தேவன் எப்படியாக வாழ்க்கையில் இடைபடுகிறார் என்பதை அனுபவரீதியாக அறிந்து கொள்ளலாம். அப்படி அறிந்து கொள்வதற்கு பொறுமை அவசியம். அவருடைய சமூகத்தில் காத்திருக்க வேண்டும். அனுதின இயல்பான வாழ்க்கையில் நாம் தேவன்மேல் உள்ள வாஞ்சையோடும், பொறுமையுடனும், நம்பிக்கையுடனும் வாழும்போது, தேவனுடைய வேளையில் அவரது ஆளுகைக்குள்ளாக முழுமையாக நடத்தப்படுவோம். தீமையான காரியங்களோ, துன்பங்களோ நமக்கு எதிராக வரும்போது, தேவன் நம்மை பலப்படுத்தி, அவற்றை கையாள அவருடைய ஞானத்தையும், பெலத்தையும் தருவார். நம் உள்ளார்ந்த உணர்வுகளில், நம்மை பெலப்படுத்தி, தேவனில் நிலைநிறுத்தவும், நம்மை ஆயத்தப்படுத்தி உயர்த்தவும், குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நாம் முன்னேறிச் செல்ல ஆற்றலையும், மனதிடனையும் நமக்குத் தருவார். தேவனுடைய சமூகத்தில் காத்திருக்கும்போது உள்ளார்ந்த (ஆவிக்குரிய) மனிதனில் நாம் பலப்படலாம்.



கர்த்தரை நம்புகிறவர்கள், புதிய சிறகுகள் முளைக்கிற கழுகுகளைப் போல மீண்டும் பலம் பெறுகிறார்கள். இவர்கள் ஓடினாலும், இளைப்படைய மாட்டார்கள், நடந்தாலும் சோர்வடைய மாட்டார்கள். ஒரு காரியத்திற்காக கர்த்தரையே எதிர்பார்த்து, அவரையே நம்பி அவரை தேடுகிறவர்கள் வாழ்க்கையில், எண்ணங்களில், மனதில் மாறுதல் அடைவார்கள். அவர்கள் வாழ்க்கை முறையும் நடத்தையும், முன் இருந்ததை விட மேலான வாழ்க்கை முறைக்கும் ஒழுக்கத்திற்கும் வரும். அவர்களுடைய ஆற்றலும், ஆளும் திறனும் புதுப்பிக்கப்படும். புத்துணர்ச்சியூட்டப்பட்டவர்களாக ஒரு காரியத்தை உறுதியுடனும், வலிமையுடனும் செய்வார்கள். அவர்கள் கழுகைப்போல இறக்கைகளை அடித்து, மேல்நோக்கி உயர்ந்த நிலைக்கு செல்வார்கள். ஒரு நிலையிலிருந்து படிப்படியாக மற்றொரு மேலான நிலைக்கு செல்வார்கள். கர்த்தர் மேலுள்ள நம்பிக்கையில் மிகவும் உறுதியாக இருப்பார்கள். தேவனோடு கூட மிக நெருக்கமாய் இருப்பார்கள். (எபிரெயர் *12:1-3*). அனுதினமும் அவருடைய சமூகத்தில் காத்திருந்து, புதுபெலனைப் பெற்றுக் கொள்வார்கள். உலகத்தின் போராட்டங்களினால், சோர்ந்து போகும் போதும், பெலனற்று இருக்கும் போதும், அவர் சமூகத்தில் காத்திருப்பதன் மூலம் புதுபெலனையும் புத்துணர்ச்சியையும் பெற்றுக் கொள்ளலாம்.

கழுகு தனது முப்பதாவது வயதை எட்டும்போது, அதன் உடல்நிலை படிப்படியாக மோசமடைந்து, உயிர்வாழவே கடினமான நிலைமைக்கு வந்துவிடும். நகங்கள் எளிதாக வளையக்கூடிய தன்மையை இழந்து இரையை உறுதியாக பிடிக்கமுடியாமல் போய்விடுகிறது. அலகு கூர்மையற்று மழுங்கி வளைந்து விடுகிறது. அதன் இறகுகள் அடர்த்தியாக கனமாக வளருவதால், அவை பறக்கும்போது, உடம்போடு ஒட்டிக்கொள்கிறது. அதனால் வலிமையோடு பறக்க முடியாமல் போய்விடுகிறது. அப்பொழுது அந்த பறவை தனிமையான ஓரிடத்திற்குச் செல்கிறது. மிகவும் உயரமான மலையுச்சிக்குச் சென்று, ஐந்து மாத காலத்திற்கு தொடர்ந்து, தன்னுடைய அலகை பாறையிலே மோதுவதன் மூலம் தன் அலகை கழற்றி விடுகிறது. நகங்களையும் இறகுகளையும் பிடுங்கி எடுக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் அகற்றப்பட்ட உடல் உறுப்புகள் மறுவளர்ச்சியடைகிறது. இறகுகள் மீண்டும் வளர்கிறது. புதிய உறுப்புகள் உருவாவதால் கழுகுகள் மீண்டும் புத்துணர்ச்சியடைந்து, இன்னும் முப்பது வருடங்களுக்கு மேல் வாழும் பெலனைப் பெறுகின்றன. கழுகு அலகை பாறையில் மோதி கழற்றினதாலும், நகத்தை பிடுங்கினதாலும் உள்ள காயத்தினால் உண்டான வேதனையினாலும், உணவில்லாமையால் பட்டினியினால் படும் துயரத்தினாலும் நிறைந்திருக்கும். புது இறகுகளும், நகங்களும் அலகுகளும் வளரும் வரை காத்திருக்கும். நாமும் கர்த்தருடைய சமூகத்திலே பொறுமையோடு கழுகைப்போல காத்திருக்கும்போது, இழந்துபோன பெலத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். நாமும் கழுகைப்போல உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.



கழுகு மிகப்பெரிய வலிமையான அலகை உடையது. அதனால் தான் உண்பதற்கான இரையின் சதையை கிழிக்கிறது. கால்கள் பெரிய உறுதியான தசைகளையும், கூர்மையான நகங்களையும் உடையது. கண்கள் மிகவும் தெளிவாக பார்க்கும் திறனையுடையது. மிக அதிக அளவு தொலைவில் உள்ள சிறிய இரையையும், காணும் ஆற்றலை உடையது. மிகவும் உயரமாக புறப்பதால், மிகவும் உயரிய பார்வையை உடையது. அதன் இறகுகள் ஒரு குறிப்பிட்ட உயரத்தில் ஏறி,தொடர்ந்து வேகமாக பறக்கும் படியாக வடிவமைக்கப்பட்டது. மிகவும் உயரமாக பறக்கவும், உயர்ந்த இடத்தில் வாழும்படியாகவும் படைக்கப்பட்டது. உயரமான செங்குத்தான பாறை பகுதியிலும், உயரமான மரத்திலும் தன்னுடைய கூட்டைக்கட்டி அதிலே வாழும். மற்ற எல்லா பறவைகளைக் காட்டிலும் மிகவும் உயரமாகவும், விரைவாகவும் பறக்கும். தைரியமும், மன உறுதியும் உடையது. ஆழமாக ஒன்றை உணர்ந்தறியும் பார்வையுடையது. சிறிய ஆட்டுக்குட்டியைக்கூட சுமந்து செல்லும் ஆற்றலை உடையது. கழுகு நீண்ட நாட்கள் உயிர் வாழும். ஒவ்வொரு வருடமும் அதற்கு புதிய இறகுகள் முளைக்கும். துன்பங்களும், சோதனைகளும் நம்முடைய வாழ்க்கையில் வரும்போது, நாம் அவருடைய சமூகத்தில் காத்திருக்க வேண்டும். போராட்டத்தை நாம் எதிர்கொள்ளும்போது மன திடனைப் பெறுவோம். எப்பேர்ப்பட்ட சூழ்நிலையையும் எதிர்கொள்ளத்தக்கதான தைரியம் கிடைக்கும். அப்பொழுது நம்முடைய வாழ்க்கையில் இப்பொழுது இருக்கிற நிலைமை மாறிவிடும்.

## காத்திருப்பதன் பலன்

விசுவாசம் என்பது தேவனையே வாழ்க்கையின் நம்பிக்கையாக கொண்டு அவர்மேல் உள்ள வாஞ்சையோடு அவரையே நோக்கிப் பார்த்து வாழ்வதாகும். அவருடைய வார்த்தையையும், வாக்குத்தத்தத்தையும் நம்பி அவரில் வளர உதவும். கடந்த காலத்தில் கர்த்தர் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளையும், இப்பொழுது செய்கிற நன்மைகளையும், எதிர்காலத்தில் நமக்காக வைத்திருக்கிற ஆசீர்வாதங்களையும் நாம் நினைத்துப் பார்த்தோமென்றால், நாம் இழந்த பெலனை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். தேவன்மேல் விசுவாசம் இருந்தால்தான், பாடுகள் துன்பவேளையிலும் கூட அவரையே உறுதியாக பிடித்துக் கொண்டு, அவர் மேலுள்ள நம்பிக்கையினால், தைரியமாக தேவனுடைய சமூகத்திற்கு சென்று, காத்திருந்து, நாம் அவரில் நிலைத்திருக்கவும், அவருடைய பாதுகாப்பில் இருக்கவும் முடியும். தேவன் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் அடிக்கடி நினைத்து நன்றி சொல்ல நம்மை பழக்கப்படுத்திக் கொள்ளும்போது, அதுவே அவர்மேல் உள்ள நம்பிக்கையும், விசுவாசத்தையும் உருவாக்கும்.

**நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன்வயது திரும்ப வால வயது போலாகிறது.**

- சங்கீதம் 103:5



கர்த்தர் நம் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றி, நம்மை திருப்தியோடும், மனநிறைவோடும், வாழச் செய்வார். தனிப்பட்ட விதத்திலும் சூழ்நிலைக்கேற்றபடியும் நம் இருதயத்தின் வாஞ்சைகளை நிறைவேற்றி நம்மை மகிழ்ச்சியடையச் செய்வார். கழுகைப்போல நம்முடைய முதிர்வயதிலும் பெலன் கொடுத்து, உள்ளார்ந்த மனுஷனில் இளமையாக வைத்திருப்பார். கழுகு நீண்ட நாட்கள் உயிர் வாழும். முதிர்வயதிலும், திரும்ப தன் இளமையைப் பெற்றுக் கொள்கிறது. வேதத்திலே காலேபை இப்படியாக நாம் பார்க்கிறோம். அவன் தனது எண்பதாவது வயதிலும் நாற்பது வயதுக்குள்ளான இளமையோடும் பெலனோடும் இருந்தான். நம்முடைய வாழ்க்கையில் எது அவசியம் என்பதை அவர் அறிந்து வைத்திருக்கிறார். நம் இன்றியமையாத தேவைகளை சந்திப்பார். நம்முடைய விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றுவார். நம்முடைய



சூழ்நிலைகளையும், நம் உள் உணர்வுகளையும்கூட அறிந்திருக்கிறார். சரீர சுகம் வேண்டும் என்ற ஏக்கத்தோடு இருப்பவர்களுக்கு சுகத்தை கொடுப்பார். தொழிலில் முன்னேற வேண்டும் என்ற வாஞ்சையோடு இருப்பவர்களுக்கு தொழிலில் முன்னேற்றத்தைக் கட்டளையிடுவார். ஒரு காரியத்தைச் செய்ய எனக்கு தகுதியில்லையே என்ற வருத்தத்தோடு இருப்பவர்களுக்கு அதைச் செய்ய தகுதியைக் கொடுப்பார். சூழ்நிலையெல்லாம் நமக்கு எதிராக இருக்கும்போது, அதை சாதகமாக மாற்றிக் கொடுப்பார். இதனிமித்தமாக நாம் கழுகைப்போல உறுதியுள்ளவர்களாகவும் சோதனைகளை மேற்கொள்ளத்தக்க பெலனுள்ளவர்களாகவும் மாறுவோம். இந்த பெலன் கர்த்தர் கொடுப்பது. கழுகு செட்டைகளை அடித்து, மிகவும் உயரமாக, வேகமாக பறக்கிறது. கர்த்தர் கழுகுக்கு பெலன் கொடுப்பது போல, நமக்கும் பெலன் கொடுத்து உயர்ந்த ஸ்தானங்களுக்கு உயர்த்துகிறார். தம்முடைய ஞானம், அறிவு, புத்தியினால் நம்மை அபிஷேகித்து உயர்த்துகிறார்.

வாழ்க்கையில் மனக்குழப்பத்தோடு கவலையோடு, இக்கட்டான நிலையில், பிரச்சனைகளின் மத்தியில், நம்பிக்கையற்ற வேளையிலும், கர்த்தர் கொடுத்த வாக்குறுதிகளை நம்ப வேண்டும். யாரெல்லாம் கர்த்தரை நம்பியிருக்கிறார்களோ, அவர்கள் அவருடைய பெலத்தால் நிரப்பப்படுவார்கள். இழந்த பெலனை மீண்டும் பெற்றுக் கொள்வார்கள் என்று கர்த்தர் வாக்குக் கொடுத்திருக்கிறார். இந்த வாக்குறுதியை விசுவாசிக்கிறவர்களுக்கு கர்த்தர் உதவி செய்வார். பிரச்சனைகள் நம்மை அமிழ்த்தி விடாதபடி, எதிர்நோக்கவும், அதைத் தாங்கும் திறனையும், அவற்றிலிருந்து நாம் எழும்பி நிற்கவும், பிரச்னைகளிலிருந்து வெளியே வரவும் செய்து, அடுத்த மேலானநிலைக்கு கொண்டு செல்வார். பிரச்சனை, போராட்டங்களைக் காட்டிலும், நம் தேவன் பெரியவர். நாம் தேவனை நோக்கிப் பார்த்து அவரை நம்பியிருக்கவேண்டும். ஒரு காரியம் நிகழ வேண்டும் என்று

விரும்பி, கர்த்தரை நம்பி, அவர் செய்து தருவார் என்ற எதிர்பார்ப்போடு, நம்பிக்கையோடு இருக்க வேண்டும். கர்த்தர் நல்லவர், உண்மையுள்ளவர், நேர்மையானவர், அவர் நமக்கு தீமை செய்யமாட்டார். அவர் நம்மை பொறுப்பெடுத்து நடத்துவார். நமக்கு வாக்கு கொடுத்ததை நிச்சயமாக நிறைவேற்றுவார் என்ற விசுவாசம் நமக்கு வேண்டும். இந்த வாக்குத்தத்தம் நம் வாழ்க்கையில் நிறைவேறும் வரை பொறுமையோடு, எதிர்பார்ப்போடு காத்திருக்கவேண்டும்.

வாழ்க்கையில் உடைக்கப்பட்டு, நெருக்கப்பட்டு, மனக்கலக்கத்தோடு, மன அழுத்தத்தோடு, அடுத்து என்ன செய்வது என்று அறியாத வேளையில், தேவனை நினைத்துக் கொள்ளுங்கள். அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவரது பெலத்தால் உங்களை புதுப்பித்துக் கொள்ளுங்கள். அவர் ஆற்றலும், வலிமையும், ஆளுந்திறனையும், உடையவர். எப்பொழுதும் நம் ஜெபத்தைக் கேட்டு உதவி செய்கிறவர். அவர் எப்பொழுதும் சோர்வடையமாட்டார். கர்த்தர் பெலவீனமானவர்கள், பலம் பெற உதவி செய்வார்.

நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை.

- ஏசாயா 49:23

நாம் எந்த ஒரு காரியத்தை செய்யும் முன்பதாக, கர்த்தருடைய உதவிக்குக் காத்திருக்க வேண்டும். கர்த்தர் நமக்கு உதவி செய்வார் என்ற எதிர்பார்ப்போடுகூட திடமனத்தோடும் தைரியத்தோடும் காத்திருக்க வேண்டும். எதையும் அவசரப்பட்டு செய்துவிடக்கூடாது. தேவனோடு தொடர்ந்து நேரத்தை செலவிட வேண்டும். தொடர்ந்து வேதத்தை வாசித்து தியானிக்க நம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள் (சங்கீதம் *119:1*) என்று வேதம் கூறுகிறது. இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்று சங்கீதம் *1:2* கூறுகிறது. தியானிப்பது என்றால், வேதத்தை திரும்ப திரும்ப வாசித்து பல கோணங்களில் சிந்தித்து ஆராய்ந்து அறிவது. அது நமக்கு வழிகாட்டியாக இருக்கும். அதிகாலையிலேயே அவரைத்தேடி அவருடைய சமூகத்தில் நம்பிக்கையோடு, காத்திருக்க வேண்டும். ஆவியோடும், உண்மையோடும், கர்த்தரோடுகூட பேசவேண்டும். நமது தனிப்பட்ட அந்தரங்கமான பிரச்சனைகளை கர்த்தரிடம் சொல்லி, நன்றியோடு அவரைத் தொழுது கொள்ளவேண்டும். அப்பொழுது அவரை உங்களுக்கு வெளிப்படுத்துவார். அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தி வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களை கொடுப்பார். நாம் தொடர்ந்து, வேத வார்த்தையை வாசித்து, தியானித்து அதை பின்பற்றி நடந்து, அதிகாலையிலே அவரை தேடி அவரோடு கூட பேசி, அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்வதன் விளைவாக நம் பழைய வாழ்க்கை நிரந்தரமாக மாறும் தாவீது இப்படியாகக் கூறுகிறான்:

கர்த்தாவே, காலையில் என் சத்தத்தைக் கேட்டருளும்; காலையில் உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி காத்திருப்பேன்.

- சங்கீதம் 5:3



நாம் தேவனுடைய கிருபையையும் உண்மையையும், அதிசயங்களையும், நீதியையும் நினைத்து அவரை துதிக்கவேண்டும். தேவனோடு கூட நெருங்கிய உறவு வைத்துக் கொள்ளவேண்டுமானால், அதிகாலை வேளையே சிறந்தது. அதிகாலையில் நமது மனம் எந்த பிரச்சனையும் இல்லாமல் இருக்கும். இந்த நேரம் நாம் முழு ஈடுபாட்டுடன் ஜெபிக்கவும், இந்த நாளை தேவன் நடத்துமாறு ஒப்படைத்து விடவும், ஏதுவாக இருக்கும். தாவீது இப்படியாக ஜெபிக்கிறான்; உம்மை நோக்கி காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டு போகாதபடி செய்யும் (சங்கீதம் *25:3*). தேவனுடைய சமூகத்தில் அவருடைய வெளிப்பாட்டிற்காக காத்திருக்கிறவர்கள் வெளிப்பாட்டை பெற்றுக் கொள்வார்கள். நாம் அவருடைய சமூகத்தில் காத்திருக்கும்போது, ஜெபத்துடன், பொறுமையுடன் ஒரு மனதுடன்,எதிர்பார்ப்புடன், நம்பிக்கையோடு அமைதியாக காத்திருக்கவேண்டும். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு (சங் *37:7*). நாம் கர்த்தரை நம்பி அவருடைய உதவிக்காக காத்திருக்கும்போது, நாம் நம்புகிற காரியம் கர்த்தராலே வரும்.

நாம் நம்முடைய வழியை அல்ல, கர்த்தருடைய மேலான வழியையே நாடவேண்டும். மோசே தன் நண்பர்களுடனே பேசுவதுபோல, தேவனோடு கூட உறவாடினான். அவன் தேவனையே முழுமையாக சார்ந்து, அவரால் வழி நடத்தப்பட விரும்பினான். தேவனுடைய வழியே சிறந்தது என்பதை அறிந்து வைத்திருந்தான். அதனால்தான் அவன் உம்முடைய வழியை எனக்கு அறிவியும் என்று கூறுகிறான். நாமும் தேவனை முழுமையாக சார்ந்து அவரால் வழிநடத்தப்பட நம்மை ஒப்புக்கொடுப்போம். தாவீது தேவனிடம், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குகாண்பியும் என்று ஜெபிக்கிறான் (சங்கீதம் *25:4*). ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் பேசின வாக்குறுதிகளை உடனே நிறைவேறவில்லை. அதற்காக அவன் பொறுமையுடன் காத்திருந்தான். தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாயிருந்தான். இதன் இரகசியம் அவன் தேவனுடைய சமூகத்தில் காத்திருந்தான். அவன் கண்கள் எப்போதும் தேவனையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தன. நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் நம் ஜெபத்திற்கு பதில் கொடுப்பார் என்று விசுவாசத்துடன் பதில் பெறுவதற்கு, அவருடைய சமூகத்தில் காத்திருக்க வேண்டும். காத்திருப்பதற்கு விருப்பமில்லாமல், பொறுமையை இழந்து போனால், பல ஆசீர்வாதங்களை நாம் இழந்துபோவோம்.

பிரியமானவர்களே, நாம் கர்த்தருக்கு காத்திருப்பதனால், பல நன்மைகள் நம் வாழ்க்கையில் வரும். எந்த காரியத்திற்காக காத்திருக்கிறோமோ அந்த காரியத்தில் நமக்கு நீதியும் நியாயமும் அளிப்பார். பாதுகாப்பிற்காக ஜெபிப்பவர்களுக்கு பாதுகாப்பை அளிப்பார். சோர்ந்து போயிருப்பவர்களின் இருதயத்தை ஸ்திரப்படுத்தி திடமானதாக்குவார் (சங்கீதம் *31:24*). காத்திருப்பவர்களுக்கு பொறுமையை கொடுத்து, துணையும், கேடகமுமாய் இருப்பார். சில காரியங்கள் நடப்பதற்கு காலதாமதமானாலும், அது நடக்கும் வரை காத்திருக்க வேண்டும். அந்த நேரத்தில் மனந்தளர்ந்து விடாமல், கர்த்தர் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களைச் சொல்லி ஜெபித்து பொறுமையோடு இருக்கவேண்டும். நம்மை கர்த்தர் ஒருபோதும் கைவிடமாட்டார். நிச்சயமாக எல்லாவற்றையும் ஏற்ற

வேளையில் நமக்கு அவர் சொன்னதை நிறைவேற்றி நம்மை மகிழ்ச்சியடையச் செய்வார். நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும். (நீதிமொழிகள் *10:24*). கர்த்தரை தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. நமது பார்வையில், நமக்கு நன்மையாக தோன்றுபவை நன்மையானவை அல்ல, தீமையை வருவிக்கும் என்று கர்த்தர் அறிந்திருக்கிறார். தேவன் நம் வருங்காலத்தை அறிந்திருக்கிறபடியால், நமக்கு நன்மையானதையே செய்வார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார் (சங்கீதம் *34:1*). நமக்கு நன்மையென்று தேவன் அறிந்திருக்கிறவைகள் நிச்சயமாக நமக்குக் கிடைக்கும்.

### கர்த்தர் மேல் நம்பிக்கை

> நீங்கள் மனந்திரும்பி, அமர்ந்திருந்தால், இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்.
>
> \- ஏசாயா 30:15

ஏசேக்கியா ராஜா யூதாவை ஆண்டபோது, ஆசீரியர் அவர்களுக்குஎதிராக படையெடுத்து வந்தனர். அப்பொழுது யூதர்கள் எகிப்தின் உதவியை நாடினர். ஆனால், கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்தார். அசீரியரின் பாளையத்தில் ஒரு இலட்சத்து எண்பத்தையாயிரம் பேரை ஒரு தூதன் ஒரே இரவில் கொன்று போட்டான் (*2* இராஜாக்கள் *18:21*). கர்த்தர் தாமே அவர்களுக்காக யுத்தம் பண்ணினார். சிதேக்கியா யூதாவை ஆண்டபோது, நெபுகாத்நேச்சார் அவர்களுக்கு எதிராக படையெடுத்து வந்தபோது, மறுபடியும் அவர்கள் கர்த்தர் மேல் தங்கள் நம்பிக்கையை வைப்பதற்கு பதிலாக எகிப்திலுள்ள வேகமாக ஓடும் குதிரைகளின் மேலும், படை பலத்தின் மேலும், இராணுவத்தின் மேலும் தங்கள் நம்பிக்கையை வைத்தார்கள். எகிப்தியரிடம் போய் உதவி கேட்டார்கள். ஆனால், அவர்களால் யூதாவை காப்பாற்ற முடியவில்லை. நெபுகாத்நேச்சார் யூதாவை வென்று, அந்நாட்டு மக்களை சிறைப்பிடித்துக் கொண்டு போனான். மீதியாயிருந்த ஜனங்கள் எகிப்திற்கு ஓடிப்போனார்கள். எகிப்தை நம்பி, அங்கு சென்ற அநேக யூத ஜனங்கள் அழிந்து போனார்கள். எகிப்து நாட்டை நம்பி அவர்களிடம் உதவிக்கு போகாதீர்கள் என்று கர்த்தர் எச்சரிக்கை கொடுத்த பிறகும், அவர்கள் கீழ்ப்படியாமல் போனார்கள். வேறெங்கும் உதவி கேட்காமல், கர்த்தரை நம்பி, சும்மாயிருக்கும்படி கர்த்தர் அறிவுரை கூறினார். கர்த்தருடைய உதவிக்காக காத்திருக்கிற ஒவ்வொருவரும் ஆசிர்வதிக்கப்படுவார்கள்.

யூத ஜனங்கள் கர்த்தர் தங்கள் வாழ்க்கையில் செய்த அற்புதங்களையும், நன்மைகளையும் மறந்து போனார்கள். தேவன்தான் பகைவர்களிடமிருந்து தங்களை விடுவிக்கவும், பாதுகாக்கவும் முடியும் என்பதை மறந்து மறந்து விட்டார்கள். கர்த்தருக்காக அவர்கள் காத்திருந்திருக்க வேண்டும். பகைவரிடமிருந்து தங்களை தப்புவித்துக் கொள்ள எகிப்திற்கு ஓடிவிட வேண்டும் என்று எண்ணினார்களேயொழிய கர்த்தரை நோக்கி கூப்பிட வேண்டும் என்றும், கர்த்தர் நம்மை நிச்சயம் விடுவிப்பார் என்ற நம்பிக்கையுமில்லாதிருந்தது. பிரியமானவர்களே, கர்த்தர் நம் வாழ்க்கையில் ஒன்றை செய்யச் சொல்லும்போது, நமக்கு ஆலோசனை கூறி நம்மை வழிநடத்தும்போது, அவருடைய ஆலோசனையின்படி,நாம் நடக்க வேண்டும். நம் மாம்சத்தில் தோன்றுகிற சுய எண்ணங்களை விட்டுவிடுவோம். முற்றிலுமாக நம்மை கர்த்தருடைய வழிக்கு ஒப்புக்கொடுப்போம். நாம் சுய எண்ணங்களின் படி செய்தால், அவை நம்மை அழிவுக்கு நேராக கொண்டு சென்றுவிடும். யூதஜனங்கள் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, அமர்ந்திராமல், பயத்தினால் நிறைந்து எகிப்திற்கு ஓடிப்போனார்கள். நீதிமான்களோ, சிங்கத்தைபோல தைரியமாயிருக்கிறார்கள் என்று நீதிமொழிகள் *28:1*-ல் காண்கிறோம். யூதர்கள் எகிப்தியரின் படை பலத்தை நம்பினது போல, நாமும் மற்ற மனிதர்களையோ, நம் சுய பெலத்தையோ, பணத்தையோ, சொத்துக்களையோ, வீடு, ஆஸ்திகளையோ, நம் அறிவு, திறமையையோ, படிப்பையோ, பதவியையோ, தாலந்துகளையோ, மனித பலத்தையோ, செல்வந்தர்களையோ நம்பினால் நம்முடைய வாழ்க்கை சபிக்கப்பட்டதாய் இருக்கும். கர்த்தரை மாத்திரம் நம்புங்கள். அவர் மட்டுமே உங்களுக்கு உதவி செய்யவும், பாதுகாக்கவும், தேவைகளை சந்திக்கவும், சமாதானம் தரவும், உங்கள் வாஞ்சைகளை நிறைவேற்றவும் முடியும். இக்கட்டான சூழ்நிலையிலும், கடினமான வேளையிலும் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டபோதும், உதவியற்ற நேரத்திலும் சிக்கல்களிலும், அவற்றை எதிர்நோக்கக் கூடிய ஆற்றலையும் திறமையையும், சமாதானத்தையும் கர்த்தர் நமக்குத் தருவார். இரட்சிப்பு கர்த்தரிடத்திலிருந்து மட்டுமே வரும். கர்த்தர் நீதி செய்கிற தேவன். அழிவிலிருந்து விலக்கி நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால், இரட்சிப்பு அவசியம். நாம் மனந்திரும்பி, அவர் மேலுள்ள நம்பிக்கையினால் அமர்ந்திருக்க வேண்டும். அவரை அண்டிக் கொள்கிற யாவரும் பாக்கியவான்கள் என்று சங்கீதம் *2:12* கூறுகிறது. நாம் எப்படியாக வாழ்கிறோம்? கர்த்தரை சார்ந்து வாழ்கிறோமா? பாவங்களை அறிக்கை செய்து, அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறோமா? பரிசுத்தமாக வாழ்கிறோமா? மனந்திரும்பியிருக்கிறோமா? அவர் நீதியுள்ள நியாயாதிபதி. இயேசு கிறிஸ்து வரும்போது, நாம் குற்றமற்றவர்களாக காணப்பட வேண்டும். குற்றஞ்செய்தவர்கள் நரகத்திற்கு தள்ளப்படுவார்கள். இந்த அழிவிலிருந்து நாம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் மறுபடியும் பிறக்கவேண்டும். இரட்சிக்கப்பட்டு, அவரைச் சார்ந்த ஒரு வாழ்க்கை வாழவேண்டும். அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீதம் *34:8*). மறுபடியும் பிறப்பதன் மூலம் கிறிஸ்துவுக்குள், அவருடைய பாதுகாப்பிற்குள் இருக்கிறோம். நாம் விசுவாசத்தில் வளர வேண்டுமானால், கர்த்தருக்கு காத்திருக்கும் அனுபவம் அவசியம்.

எனது வாழ்க்கையில் ஒரு முன்னேற்றமுமில்லை, சாபம் நிறைந்த வாழ்க்கையாய் இருக்கிறதே, என்ன காரியத்தைச் செய்தாலும், வாய்க்காமல், போகிறதே என்று ஏங்குகிறவர்களுக்கு, சாபத்திலிருந்து விடுதலை தந்து, கையிட்டு செய்யும் காரியங்களை வாய்க்கச் செய்வார். ஐயோ நான்வியாதியோடிருக்கிறேனே, என்னால் வலியை தாங்க முடியவில்லையே,

எப்பொழுது இந்த வியாதி என்னை விட்டு போகும் என்று தவிப்பவர்களுக்கு வியாதியிலிருந்து விடுதலை தருவார். என் வாழ்க்கையே ஒரு போராட்டமாய் இருக்கிறதே என்று கவலையோடு இருப்பவர்களுக்கு, போராட்டத்திலிருந்து விடுவித்து சமாதானத்தை தருவார். மனவேதனையோடு இருப்பவர்களுக்கு மனதின் வேதனைகளை நீக்கிப் போடுவார். குடும்பத்தில் நிம்மதியமில்லாமல் ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசி, சண்டையோடு கோபமாய் இருப்பவர்களுக்கு சமாதானத்தை கட்டளையிட்டு ஒருவருக்கொருவர் மன்னித்து அன்பாயிருக்கச் செய்வார். ஞானத்தில் குறைவுள்ளவனா யிருக்கிறேனே என்று வருந்துபவர்களுக்கு கர்த்தருடைய ஞானத்தால் நிரப்புவார். இன்னும் என்னென்ன காரியங்களுக்காக நாம் ஜெபிக்கிறோமோ அவை கிடைக்கும்வரை பொறுமையோடு, நம்பிக்கையோடு காத்திருப்போம். நிச்சயமாக தேவன் அதை நிறைவேற்றுவார்.

பாடுகள் நம் வாழ்க்கையில் வருவதால், பல நன்மைகள் நமக்கு உண்டாகிறது. மனந்திரும்பி, தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு நடக்கும் காரியங்கள் தீமையை தருவது போல தோன்றலாம். ஆனால், அத்தீமைகள் இறுதியில் நன்மையானதாக முடியும். கர்த்தர் அத்தீமைகளை நன்மையாக மாற்றிப்போடுவார். நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்கிறேன் (சங்கீதம் *119:71*). நமது வாழ்க்கையில் பாடுகள், போராட்டங்கள், சோர்வுகள் வரும்போது, நாம் சோர்ந்து போகாமல், இயேசு கிறிஸ்துவை முன் மாதிரியாக வைத்து, அவரை பின்பற்றவேண்டும். அவர் சிலுவையில் பாடுகளை சகித்ததையும், இப்பொழுது நமக்காக தேவனுடைய வலதுபுறத்தில் இருந்து நமக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறதையும் நினைத்து நம் வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல வேண்டும். யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு தீமை செய்தார்கள். ஆனால், கர்த்தர் அத்தீமையை நன்மையாக மாற்றிப்போட்டார். யோசேப்பை எகிப்திற்கு அதிபதியாக கர்த்தர் உயர்த்தும் முன்பாக அநேக பாடுகளை அவன் பொறுமையோடு கடந்து சென்றான். கர்த்தர் அவன் வாழ்க்கையில் வைத்திருந்த தரிசனம் நிறைவேறும் வரை காத்திருந்தான். அந்த தரிசனத்தையே தனக்கு முன்பாக வைத்து முன்னேறிச் சென்றான்.

> ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது.
>
> - 2 கொரிந்தியர் 4:16

அனுதினமும் நாம் உள்ளார்ந்த மனுஷனில் வளர்ந்து, புதிதாக்கப்பட்டவர்களாய் மாறவேண்டும். வேத தியானத்தின் மூலமாகவும், ஆவியோடும், உண்மையோடும், ஜெபிப்பதன் மூலமாகவும், அவருடைய பிரசன்னத்தில் நிறைந்து வாழ்வதன் மூலம் நாளுக்கு நாள் புதிதாக்கப்படும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அப்போஸ்தலனாகிய பவுல், உள்ளார்ந்த மனுஷனில் பலப்படும் அனுபவத்தில் தன் முழு கவனத்தையும் செலுத்துகிறான். ஒருவருக்கொருவர் உள்ள உறவு முறையில் நெருக்கங்கள் ஏற்படும்போது, நம் வேலைகளில் பிரச்சனைகள் வரும்போது அதை எதிர்கொள்ளும் போதும், நியாயமற்ற, இரக்கமற்ற முறையில் நடத்தப்படும் போதும், வேண்டுமென்றே



நம்மை ஒருவர் அலைக்கழிக்கும் போதும் நாம் சோர்ந்து போய் விழுந்து விடுகிறோம். நாம் மனவருத்தத்தோடு, சோர்வோடு இருக்க நம்மை அனுமதிக்கக் கூடாது. நாம் தேவனுடைய ஆவியினாலே உள்ளார்ந்த மனுஷனில் பலப்பட வேண்டும். (எபேசியர் *3:16*). இப்பொழுது இருக்கிற கடினமான பாடுகளைப் பார்த்து என்றும் நிலைத்திருக்கிற வாழ்வை விட்டுவிடக்கூடாது. நாம் பரலோகத்தில் அடையப்போகும் மகிமையோடு ஒப்பிடும்போது, இப்பாடுகள் கொஞ்ச காலம்தான். அதை நாம் நினைவில் வைத்துக் கொண்டு பாடுகளை மேற்கொள்ளுவோம். நாம் காண்கின்ற இந்த உலகமும் அதிலுள்ளவைகளும் நிலையில்லாதது. அழிந்து போகும். என்றென்றும் நிலைத்திருக்கிற இயேசு கிறிஸ்துவையும், மறுமையில் நமக்காக வைத்திருக்கிற வாழ்வையும் நம்பி வாழவேண்டும். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களை, அவர்தனது பொறுப்பில் வைத்திருக்கிறார். அவர்களை ஒருபோதும் கைவிடமாட்டார். இயேசு கிறிஸ்து, சிலுவையில் வெற்றி சிறந்தார். அதனால் என்றும் நிலைத்திருக்கும் ஒரு வாழ்வை வைத்திருக்கிறார். நம் வாழ்வில் வரும் சோதனைகள் இனிவரும் மகிமைக்கு ஈடுஇணையாகாது. இயேசு கிறிஸ்து நம்மோடு கூட இருக்கிறபடியால், இந்த உபத்திரவங்களை நாம் மேற்கொள்ளலாம். நாம் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைவதற்கும் பாடுகளை கர்த்தர் அனுமதிக்கிறார். சோதனைகள், போராட்டங்கள் நம் வாழ்க்கையில் வருவதால், நம் உள்ளார்ந்த மனுஷனில் பலப்படுத்தப்படுகிறோம். தேவனிடமிருந்து நாம் ஆறுதலைப் பெற்றுக் கொள்கிறோம். அதனால் மற்றவர்கள் கஷ்டப்படும்போது, நாம் ஆறுதலை அளிக்கிறவர்களா யிருக்கிறோம். கர்த்தருக்கு காத்திருப்போம், புதுபெலன் அடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து உயர எழும்புவோம். ஆமென்!

★★★

---

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | **ரூ.** 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | **ரூ.** 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

---

*உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்*

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com** இணைய தளம் : **www.kennedyministries.org**

## ஊழியப் பயிற்சி வகுப்புகள்

வேதத்தின் ஆழங்களைக் கற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களும், ஊழியம் செய்ய வாஞ்சை உள்ளவர்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

**வாரந்தோறும் - திங்கள் கிழமைகளில் மாலை - 7 மணி முதல் 9 மணிவரை**

*இடம் : ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. [சைதாப்பேட்டை கோர்ட் அருகில்]*

# துதி ஆராதனை




**www.bfmmm.com**

- தேவன், சட்ட திட்டங்களைக் காட்டிலும், நம்மோடு உறவு கொள்வதிலேயே அதிக ஆர்வமுள்ளவராய் இருக்கிறார்.
- நாம் எப்படியாக இருக்க வேண்டுமென்பது தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது.
- கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாததே, பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையில் அழிவைக் கொண்டு வருகிறது.
- வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு காரியமும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இயங்கும்படியாகவே அமைக்கப்பட்டுள்ளது. மனிதனுக்கான சூழ்நிலை, கர்த்தருடைய பிரசன்னமே. மனிதனுடைய பாவமே, கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து அவனை பிரிப்பதாகும். கர்த்தர் பரிசுத்தமானவர், பாவத்தை அவருடைய பிரசன்னத்தில் ஒருபோதும் அனுமதிக்கவேமாட்டார். இயேசு கிறிஸ்து மூலமாகக் கிடைக்கும் இரட்சிப்பே, கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் மறுபடியுமாக நாம் திரும்புவதற்கான ஒரே வழி.
- துதியும், ஆராதனையுமே, கர்த்தருடைய பிரசன்னத்தை நமக்கு பெற்றுத் தரும் பரிசுகளாகும்.
- சபைக்கு முன்பாக துதிப்பதற்கு முன்பாக, முதலாவது தனியாகத் துதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.
- ஆராதிப்பதற்குத் தேவையானது கர்த்தருடைய பிரசன்னமே.
- இயேசுவே, தேவனிடம் செல்வதற்கான ஒரே வழி. அவரைத் தவிர வேறு இரட்சகரும், இரத்தமும் இல்லை.
- துதிப்பதே தேவனுடைய பிரசன்னத்திற்கு செல்வதற்கான வழி.
- கர்த்தரை ஆராதிப்பவர்களே அவரது நண்பர்கள்.
- கர்த்தர், உங்களோடு வாழ விரும்புகிறார்.
- உங்களது சூழ்நிலையை மாற்றுவதற்காகவே துதியை கர்த்தர் உண்டாக்கியிருக்கிறார்.
- கர்த்தருடைய பிரசன்னம் இல்லாதபோது, எல்லா மனிதருமே வெறுமையை அனுபவிக்கிறார்கள்.
- நாம் துதிக்கும்போது, கர்த்தரை எதிர்நோக்கத் தேவையில்லை. அவரே நம்மிடம் வருவார்.



- நாம் துதிக்கும்போது நமது கவனம், நம்மைவிட்டு தேவனிடம் செல்கிறது.
- நாம் துதிப்பதற்கு முன்பாக, அவரை நெருங்கிச் செல்ல வேண்டும். அவரது குணாதிசயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும்.
- துதிப்பது என்பது நம் கரத்திலிருக்கிறது. நாம்தான் முடிவெடுக்க வேண்டும்.
- ஒவ்வொரு நாள் வீட்டை விட்டு கிளம்பும்முன்பு, கர்த்தர் என்ன சொல்கிறார் என்று கவனமாய்க் கேளுங்கள்.
- துதிப்பது என்பது நமது சுவாசம்போல் இயற்கையாக இருக்க வேண்டும்.
- கர்த்தரைத் துதிப்பதற்கு சிறப்பு காரணம் ஏதும் தேவை இல்லை.
- ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நேரமும், துதிப்பதற்கு ஏற்றதாகும்.
- உங்களது துதி, கர்த்தர் உங்கள் வாழ்வில் செயல்படுவதை காண்பதற்குக் கற்றுக் கொடுக்கும்.
- உங்களது அந்தரங்க துதி, வெளியரங்கமான வெற்றிக்கு உங்களை உருவாக்குவதாகும்.
- ஒரு நாளின் துவக்கத்திலே நீங்கள் துதிப்பது, எஞ்சியுள்ள நாளின் காரியங்களை கர்த்தர் நடத்தித் தர ஏதுவாகும்.
- துதிப்பது என்பது நேரிடையாகவும், மறைமுகமாகவும் இருக்கும். மற்றவர்களிடத்தில் கர்த்தரைப் பற்றி உயர்த்தி நீங்கள் பேசுவது மறைமுகமாகக் கர்த்தரைத் துதிப்பதாகும்.
- நீங்கள் பாடும் ஒவ்வொரு புதிய பாடலும் கர்த்தருடைய பிரசன்னம் உங்களோடு இருக்கச் செய்யும்.
- கர்த்தரோடு நமக்குள்ள உறவே துதியின் பிறப்பிடம்.
- நமக்குள் இருப்பதை வெளிப்படுத்துவதே துதி.
- இப்படிப்பட்ட விதத்திலே துதிக்கலாம் என்று ஒரு முறையை நம்மால் தெரிந்தெடுக்க முடியாது. நம்மை முழுமையாக அர்ப்பணிப்பதே துதியைக் கொண்டு வரும்.
- கர்த்தருக்கு உங்களது துதி தேவையில்லை. உங்களது துதி அவரை மாற்றுவதோ, பாதிப்பதோ கிடையாது. உங்களது துதி, உங்களைத்தான் மாற்றுகிறது, பாதிக்கிறது.
- விசுவாசத்தை அடிப்படையாக வைத்து ஏறெடுக்கும் துதி, இனி கர்த்தர் செய்யப்போகும் காரியங்களுக்கும் நன்றி சொல்ல வைக்கும்.
- நம் இருதயத்தை பரிசுத்தப்படுத்துவது நாம் கர்த்தரை ஆராதிப்பதற்கு தகுதிப்படுத்துகிறது.
- இருதயத்திலிருப்பதையே பேசுபவர்களும், செய்பவர்களும், தம்மை உண்மையாக ஆராதிக்கக் கர்த்தர் விரும்புகிறார்.
- தாகத்தோடும், வாஞ்சையோடும் தம்மை ஆராதிப்பவர்களோடு இருக்கக் கர்த்தர் விரும்புகிறார்.
- துதி என்பது நம்மிலிருந்து வருவதாகும். ஆராதனை என்பது கர்த்தர் வெளிப்படுத்துவது. துதி என்பது நாம் கர்த்தருக்கென்று ஒரு வீடு கட்டுவதுபோல. ஆராதனை என்பது கர்த்தர் அதற்குள் நுழைவதாகும்.
- கர்த்தருடைய பிரசன்னம் நமக்குத் தருவது: சந்தோஷம், சமாதானம், இளைப்பாறுதல், ஆசீர்வாதங்கள், கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ள தரிசனத்தை நிறைவேற்றும்படியான ஜனங்கள், பாதுகாப்பு, மாற்றியமைக்கப்பட்ட சூழ்நிலைகள், சாத்தான் மீது வெற்றி, ஞானம், அவர் செய்வதை பார்ப்பது.

★★★




ஒவ்வொரு மனுஷனும் நல்லதொரு வாழ்க்கையை வாழ ஆசைப்படுகிறான். ஏதோ சாப்பிட்டோமா, தூங்கினோமா என்றிருந்தால் போதும் என்று வாழும் மனிதர்கள் ஒருவரும் கிடையாது. கஷ்டம் இல்லாத, போராட்டம் இல்லாத, நெருக்கடி இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ எல்லா மனிதருமே விருப்பப்படுகிறார்கள். அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ என்னென்ன செய்யவேண்டும் என்று யோசித்து, அதற்கான முயற்சிகளையும் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில், ஒவ்வொரு நாளும் புத்துணர்வோடு செயல்படுபவர்களும் உண்டு. ஒரு இயந்திரத்தைப்போல ஓடுபவர்களும் உண்டு.

ஒவ்வொரு மனுஷனும், மனுஷியும் முதலாவது தங்களைக் குறித்து (தனிப்பட்ட முறையில்) யோசிக்கிறார்கள். பின்னர் குடும்பத்திலுள்ள மற்றவர்களைக் குறித்து (தங்களோடு சம்பந்தப்பட்டவர்கள்) யோசிக்கிறார்கள். நேற்று என்ன நடந்தது, இன்று என்ன செய்யலாம்? இவைகளுக்கான பதில் கிடைக்கின்றது. ஆனால், நாளைக்கு என்ன செய்யலாம் என்பதைக்குறித்து தெளிவாக திட்டமிடமுடியவில்லை. நாளை என்பது மனிதனுடைய அறிவிற்கும், அனுபவங்களுக்கும் அப்பாற்பட்டு உள்ளது. அதைப்பற்றி அறிந்துகொள்ள ஒருவனாலும் முடியவில்லை. விஞ்ஞானிகளாலும், ஞானிகளாலும், மன இயல் வல்லுனர்களாலும், தத்துவ மேதைகளாலும் முடியவில்லை.

மனிதரையும், அவர்களுக்காக உண்டாக்கப்பட்ட வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ளவைகளையும் உண்டாக்கின தேவனே எல்லாவற்றையும் அறிவார்.

கர்த்தருடைய சித்தத்தை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக் காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்?

> சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

-ரோமர் 11: 34-36

அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான்: நம்மையும் நம்மைச் சுற்றி இருப்பவைகளையும் உண்டாக்கின தேவனுடைய யோசனைகளை யாரால் அறிந்து கொள்ளமுடியும்? மனுஷன் எதையோ ஒன்றை ஏற்கனவே தேவனிடம் கொடுத்து அதற்கு பிரதிபலனாக எதையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள



வில்லை. அவர், அவருக்காகவே எல்லாவற்றையும் உண்டாக்கி வைத்திருக்கிறார்.

இதையே சாலொமோன் ஞானி இப்படியாகச் சொல்கிறான்:

> அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்.

- பிரசங்கி 3:11

நம்மையும், நம்மைச் சூழ உள்ளக் காரியங்களையும் பார்க்கும்போது, இவைகளுக்குப் பின்னால் இருக்கிற இவற்றையெல்லாம் உண்டாக்கின தேவனை நாம் அறிந்துகொள்கிறோம். ஒவ்வொன்றையும் உருவாக்க அவர் திட்டமிட்டிருப்பதையும், ஒவ்வொன்றுக்கும் ஒரு நோக்கம் இருப்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இத்துடன் மனுஷனுடைய சிந்தனை முடிந்துபோகவில்லை. கடந்த கால மனிதர்களின் வாழ்க்கையை, அது முடிந்துபோனதால் அவர்களுடைய வாழ்க்கையின் ஆரம்பம் முதல் முடிவு வரை நமக்கு தெரிகிறது. அதிலும் சில காரியங்கள் ஏன் நடந்தது? எதற்காகக் கர்த்தர் அதை அனுமதித்தார்? என்பதையெல்லாம் நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை. முடிவுபெற்ற ஒருவரின் வாழ்க்கையில் நடந்தவைகளைக் கொண்டே நம்மால் முழுமையாக வாழ்க்கையைப்பற்றி அறிந்துகொள்ள முடியவில்லை. நம் வாழ்க்கையை எப்படி நாம் அறிந்துகொள்வது?

> எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுகுகு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;
>
> நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.
>
> மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரிய வைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.
>
> நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.

- 1 கொரிந்தியர் 2: 9-12

தேவன், மனுஷனுக்காக உண்டாக்கி வைத்திருப்பவைகளை மனுஷன் தனக்குள்ளாக இப்படியாக இருக்கலாம் என்றுகூட கற்பனை செய்து பார்க்கமுடியாது. அறிவில் சிறந்த கல்விமான்கள், மேம்பட்ட அனுபவங்களால் ஞானிகளானவர்கள், விஞ்ஞானிகள் விளக்கிச் சொன்னால்கூட அது குறைவானதே, பரிபூரணமானது அல்ல, பல காரியங்களைக்குறித்து படித்தாலும், கேட்டாலும் உணர்ந்துகொள்ளமுடியாது.

இதற்காகவே தேவன் தமது ஆவியினால் நம்மை அபிஷேகிக்கிறார். அவருடைய ஞானம், அறிவு, புத்தியினால் நம்மை நிரப்புகிறார்.

- தொடரும்